15

# இலக்கு

''அடி ஆத்தா!'' என்றுதான் கூவத்தோன்றிற்று. அந்த முரட்டு மிருகப்பிடி இரண்டு ஆள் உசரத்துக்கு வளர்ந்திருந்த, ஊசி முனை போல் குத்திய கோரப் புல் வெளியில் அவளைத் தரதரவென்று இழுத்துச் சென்ற போது மறுபடி மறுபடி மனசு பதைத்து, ஆத்தா, ஆத்தா என்று அலறியபோது இரும்புக்கரம் வாயைப் பொத்தி குரல்வளையை அமுக்கிற்று. பாறையாகக் கனத்த அந்த மிருகம், இரும்பாய் அழுத்திய கரங்களால் அவளது உடைகளைத் தாறு மாறாகக் கலைத்த போது கோபமாக பொறுமையற்ற வார்த்தைகள் வெடித்தன - கித்னா கப்டா, கித்னா கப்டா (எத்தனை துணி, எத்தனை துணி?) துணிப்பொதிக்குள் பொக்கிஷத்தைக் கண்ட வெறியுடன் அது அவளுள் புகுந்து சூறையாடிய போது ரத்தநாளங்களெல்லாம் வெடித்த அதிர்ச்சியில் மறுபடி அவள் ''என்னை பெத்த ஆத்தா'' என்று அலறினாள். புலன்கள் எல்லாம் ஸ்தம்பித்த நிலை மெல்ல மாறி, மிருகப்பிடி விலகிய பிரக்ஞை ஏற்பட்ட பிறகு ''இந்தா வெச்சுக்கோ உன் துணிகளை'' என்று பொதியாய் வீசப்பட்ட உடுப்புக்குக் கீழ் கழுத்தில் நெருடிய அந்தச் சிலுவை தொங்கிய சங்கிலியை அவள் வெறித்துப் பார்த்தாள்.

*   *   *   *   *

கையிலிருந்த சட்டியிலிருந்து அவள் தீவனத்தை கீழே இரைத்த போது எங்கிருந்து அது விழுகிறது என்கிற ஞானமில்லாமலோ, அல்லது அதை அறியும் ஆர்வமில்லாமலோ கோழிகள் - பெட்டை கள், சேவல்கள், குஞ்சுகள் - கழுத்தையே நிமிர்த்தாமல் அரக்க பரக்க அதைக் கொத்தித் தின்பதிலேயே கருத்தாக இருந்தன. கெக்கிலி பிக்கிலி என்று சத்தம் போட்டன. கோழியின் வாழ்வு ரொம்ப சரளமானது என்று அவள் நினைத்துக் கொண்டாள். ஜென்ம மெடுத்ததே இரைக்காக என்று உணராத அஞ்ஞானம் சுகமானது. கழுத்தை அசைத்து அசைத்து பரம திருப்தியுடன் நேற்று தீனியைக் கொரித்த ஒன்று மேஜையில் கறியாக இன்று அமரும்போது ஒரு நிமிடம் அவளுக்கு அந்தக் கெக்கிலி பிக்கிலி சத்தம் நினைவில் நெருடும். எல்லாரும் சாப்பிட்ட பிறகு அவளுக்கு ஒரு துண்டு கூட மிஞ்சவில்லை என்பதில் வருத்தம் கூட ஏற்படாது.

'கூழுக்கும் கஞ்சிக்குமே தாளம் போடையிலே கறிக்கு எங்க போக?'

இழுத்து இழுத்து ராகமாய் ஒலிக்கும் அந்தத் தமிழைக் கேட்டே வெகு காலமாகிவிட்டது. "எங்க போக?" - பயங்கர பரிமாணங்கள் கொண்ட வார்த்தைகளாய் நினைவில் நிற்பவை. அதன் பின்னால் இருந்த பரிதவிப்பே இப்போது இந்த டடத்துக் கொல்லைமேட்டில் அவளைக் கொண்டு வந்து நிறுத்தியது என்கிற நினைப்புதான், வருத்தம் ஏற்படாததற்கு இன்னொரு காரணம். எதிர்ப்பார்ப்புக்கும் ஒரு வக்கு வேணாம்?

சட்டி காலியாகி விட்டது. கோழிகளுக்கு வயிறு நிரம்பியிருக்க வேண்டும். சுவாரஸ்யம் குறைந்து மூலைக்கொன்றாய் நகர்ந்தன. குஞ்சுகள் ஏதோ சத்தியத்துக்குக் கட்டுப்பட்டதைப் போல நேர் கோடாய் அணிவகுத்து பெரியதைத் தொடர்ந்தன.

எல்லா ஊர்களிலும் கோழிகள் ஒரே மாதிரி இருப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. மதுரைக்கும் அங்கிருந்து கண்காணாத

தேசமாகத் தோன்றும் இந்த ஒரு புரியாத ஹிந்தி பேசும் இந்த இடத்திற்கும் கோழிகளும் பறவைகளும் நாயும் பூனையும் எந்த வித்யாசமுமில்லாமல்தான் தெரிந்தன. சில்லென்று காற்று வீச அந்த சுகத்தை ஒரு விநாடி அனுபவித்தபடி தலையைச் சுற்றியிருந்த கேப்புத் துண்டை பறக்காமல் கையால் இழுத்துப் பிடித்தாள். இருண்டு வந்த மேகத்தைக் கண்டு சுபாவமான பதைப்புடன் நகர்ந்தாள். காயப்போட்ட உடுப்பையெல்லாம் அள்ளணும். இன்று சலவை நாள். ஐந்தாறு கொடிகளில் கருப்பும் வெள்ளையும் பிரவுனுமாக கவுன்கள் காய்ந்தும் காயாமலும் தொங்கிக் கொண்டிருந்ததை ஏற்கனவே மரியா கிளிப்பை வெடுக் வெடுக்கென்று பிடுங்கியபடி அள்ளிக் கொண்டிருந்தாள். அவள் கையில் சுமை ஏறியது கண்டு ''மிச்சத்தை நான் கொண்டாறேன்'' என்று பொருள்படும்படி சைகை காட்டி இவள் புன்னகைத்தாள்.

முரட்டு உடுப்புகள். தலையிலிருந்து பாதம் வரை மூட. காற்று கூட உள்ளே புகமுடியாமல் இந்த வெப்பத்துக்குப் புழுங்கி வியர்க்கும். ஆனால் இது ஒரு கவசம். இந்தக் கருப்பையும் பிரவுனையும் வெள்ளையையும் தாண்டி யாருடைய கண்ணும் அலைபாயாது. அதை நினைத்து அவளுக்குச் சிரிப்பு வந்தது. எனக்குத் தெரியுமே உள்ளே என்ன இருக்குன்னு? முரட்டு உடைக்குச் சற்றும் சம்பந்தமில்லாத மிருதுவான உடம்பு. குளிக்கும் போது தனிமையில் அவளே கண்டு ரசிக்கும் உடம்பு. சீச்சீ, இப்படியெல்லாம் நினைக்கிறதே பாவம். ஸிஸ்டர் மேரிக்குத் தெரிஞ்சா பாவ மன்னிப்புக் கேட்கணும்பாங்க. ஃபாதர் ஜானுக்குத் தெரிஞ்சா மடத்திலே இருக்க இந்தப் பொண்ணு லாயக்கில்லேன்னு சொன்னாலும் சொல்வார்.

''சாமி, இது உங்க புள்ள. அது உங்க கூரையிங்கீழ இருந்தா நாங் கவலையில்லாம இருப்பேன். வளர்த்து ஆளாக்கிக் கட்டிக் கொடுக்க வசதியில்லே சாமி. பத்து சவரன் கேக்கறான் ஒவ்வொருத்தனும். எங்க போக?''

*''ஆத்தா அவுக வேற சாமி கும்பிடச் சொல்றாக.''*

*''அவுக சொல்றபடி செய்யி புள்ள. நம்ம சாமி கும்பிட்டு நாம என்னத்தைக் கண்டம்?''*

*வேறு சாமி, வேறு பெயர். என்ன கொடுக்குமோ இல்லையோ, சொர்க்கவாசல் திறக்கும். சாமிக்கே வாழ்வை அர்ப்பணித்தால்.*

*உமது நாமம் பரிசுத்தப்படுவதாக!*

*உமது ராஜ்யம் வருவதாக!*

*அதற்காகத்தான் ஒரு நாள் இந்த உடுப்பு உடம்பில் ஏறிற்று. அன்று அவள்தான் கதாநாயகி. திருமண தினத்தன்று மணமகள் கதாநாயகி ஆவதைப் போல. சென்ற பிறவியில், பள்ளியில் தமிழ் வாத்தியார் சொல்லிக் கொடுத்த பாசுரம் போல ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்...'' உனக்கே நான் நாயகி - தூயோமாய் வந்துத் தூமலர் தூவித் தொழுது..... ஆகையால் இந்த முரட்டுப் பொதிக்குள் இருக்கும் உடம்பு உனக்கே. என் உள்ளமும் உடலும் சிந்தையும்..... உனக்கே - பத்து சவரனுக்கு வக்கில்லாததாலே.*

*நீ இங்க வந்தது நல்லதுக்குனு நினைச்சுக்க. சொர்க்கவாசலுக்கு வந்திருக்கேன்னு நினைச்சுக்க. சொர்க்கம் எப்படியிருக்கும் என்று தெரியாது. ஆனால் சோறு கிடைத்தது. எழுத்தும் படிப்பும் வந்தது. மிருதுவாக பேசப் பழகிற்று.*

*கண்ணாடியில் உருவத்தைப் பார்க்கும்போது உள்ளம் திடுக்கிடும். இது யாரோ என்று தோன்றும். புசுபுசுவென்று இருந்த முடியின் நினைவு வந்து நாபியிலிருந்து துக்கம் சுருண்டு மேலே எழும். ஓசைப்படாமல் அந்தப் பெரிய கதவைத் திறந்து ஓடிவிட்டால் என்ன என்று பதைக்கும். சற்று நேரப் படபடப்புக்குப் பின் மனசு மெல்ல மெல்ல இறங்கும். இப்படிப்பட்ட பாவச் சிந்தனைகள் தனக்கு மட்டும் ஏன் வருகிறது என்று குற்ற உணர்வில் சுருங்கிப் போகும்.*

''இந்த மாதிரி சமயங்களிலே அதிகமா பிரார்த்தனை பண்ணணும்.''

எங்களை பாவத்திலிருந்தும்
தீமையிலிருந்தும் மீட்டருளும்.
எங்களை நல்வழிப்படுத்தி
உமது பாதையில் நடக்குமாறு
ரட்சித்தருளும்...

எல்லா சகோதரிகளும் விழுந்து விழுந்து பிராத்தனை செய்வதையும் ஜெபமாலை உருட்டுவதையும் பார்க்கும் போது தன்னைப் போலத் தான் அவர்களும் என்று தோன்றும்.

''ஸிஸ்டர் ஜோஸபீன், உங்க வீட்டிலே யார் யாரெல்லாம் இருக்காங்க?''

அவள் பேசுவது யார் காதிலாவது விழுந்திருக்குமோ என்று ஸிஸ்டர் அக்கம் பக்கம் பார்த்து ரகசிய குரலில் முணுமுணுத்தாள். ''அதெப்பத்தியெல்லாம் இப்ப நினைச்சுப் பார்க்கக்கூடாது ஸிஸ்டர்.''

''எனக்கு நினைப்பு வருது.''

சொல்லும்போதே சோளக் கொல்லையும், கொண்டைகளின் மேல் அமர்ந்திருக்கும் சிட்டுக்குருவிகளும் கண்ணில் நிழலாடின. அப்பாவின் அரிவாள் மீசையும் போதைக் கண்களும் ஆத்தாவின் குனிந்த தலையும்.

''நினைப்பு வந்தா......''

''பாவம்னு சொல்லுவீக.''

''பாவமோ, புண்ணியமோ, கஷ்டப்படுவம்.''

அவள் வாயை மூடிக் கொண்டாள். மாலைப் பிரார்த்தனை முடிந்த பிறகு பெரிய சிஸ்டர்களின் சாப்பாடு முடியும் வரை

முற்றத்தில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து வெட்டவெளியைப் பார்க்கும் வேளையில் சினிமாப் படம் போல எல்லாம் நினைவுக்கு வரும்போது கண்ணில் நீர் தளும்பத்தான் செய்தது. ஆனால் மனசு சுயேச்சையுடன், ஒரு வித லயிப்புடன், அதைத் துழாவியதைத் தடுக்கும் சக்தி அவளுக்கு இல்லாதது போல இருந்தது.

''ஸிஸ்டர் ஆஞ்சலா!''

அவள் திடுக்கிட்டாள். யாரோ அஞ்சலை என்று கூப்பிடுவது போல் இருந்தது. இப்போது ஆத்தாவுக்கே அப்படிக் கூப்பிடத் தோணாது. ''உனக்கு ஒரு தாவணி வாங்க வக்கில்லாம இருந்தேன். இப்ப உடம்பு மூட துணி கிடைச்சிருக்கு'' என்று முதல் முதலில் அவளை இப்படிப் பார்த்த போது ஆத்தா தன் திகைப்பை மறைத்துக் கொண்டு சொன்னது நினைவுக்கு வந்தது. இந்த ஆத்தாவின் மண்டையை நாலு மொத்து மொத்தினால் என்ன என்று அன்று ஏற்பட்ட கோபமும் துக்கமும் நினைவுக்கு வந்தது.

''ஸிஸ்டர் ஆஞ்சலா!''

அவள் பரபரவென்று நடந்தாள்.

''பெரிய ஸிஸ்டர் கூப்பிடறாங்க.''

காடாய் மண்டிக் கிடந்த செடிகளையும் புதர்களையும் தாண்டி கையிலிருந்த உடுப்புக்கள் கீழே புரளாமல் ஜாக்கிரதையாக சுமந்தபடி அவள் இஸ்திரி செய்யும் இடத்தில் எல்லாவற்றையும் வைத்துவிட்டு கூடத்தை நோக்கி நடந்தாள்.

சிஸ்டர் தெரஸாவும் ஃபாதர் ஜானும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் இருவர் முன்னும் மண்டியிட்டு வணங்கினாள்.

''இந்த இடம் பழகிவிட்டதா குழந்தை?'' என்றார் ஃபாதர் ஜான்.

அவள் தயக்கத்துடன் சொன்னாள்.

''பழகிட்டதா சொல்ல முடியாது. மத்த ஸிஸ்டருங்க கூட இருக்கறதனாலே சமாளிக்க முடியுது.''

''பழகிடும்'' என்றார் ஃபாதர் தீர்மானமாக. ''இவங்க காட்டு ஜனங்க. மூடர்களே தவிர பொல்லாதவங்க இல்லே. அன்பைக் காட்டினா நிச்சயம் அதுக்கு அடிபணியாதவங்க யாரும் இருக்க முடியாது. அதுக்குதான் நாம மருத்துவ உதவி செய்யறோம். பள்ளி நடத்தறோம். இதுவரைக்கும் யாரும் இந்த மாதிரி உதவியை இந்தப் பகுதியிலே செஞ்சதில்லே.''

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் பேசாமல் நின்றாள்.

''ஏதாவது பிரச்னையிருக்கா?''

''ஊரை விட்டுத் தள்ளி இத்தனைத் தொலவு நடுக்காட்டிலே இருக்கறது பயமா இருக்கு ஃபாதர்.''

''ஊருக்குள்ளே இடம் கிடைக்காத தாலேதானே இங்க இருக்கோம்? நாம சேவை செய்ய வந்திருக்கோம் குழந்தே. அது ஒண்ணுதான் முக்கியம். வேற எதுவும் இல்லே. கர்த்தர் மேல பூரண நம்பிக்கை இருந்தா எந்த பயமும் தோணாது.''

அவள் உதட்டை மடித்துக் கொண்டு தலையைக் குனிந்தாள்.

''உங்களுக்குத் தேவைப்படற சாமானை வாங்க ஸிஸ்டர் தெரஸா டவுனுக்குப் போறாங்க. நாளைக்கு தான் வருவாங்க. நானும் தில்லிக்குப் போறேன். நீங்க மூணு சிஸ்டரும் மரியாவும் ஒரு ராத்திரிப் போது தனியா இருக்கணும்.''

அவளுக்கு திடுக்கிட்டது. லேசாக பீதியில் விரிந்த விழிகளுடன் அவரைப் பார்த்தாள். ''ஒரு ராத்திரிதானே'' என்றார் சிஸ்டர் தெரஸா லேசான சலிப்புடன். ''இழுத்துப் பூட்டிக் கிட்டுப் படுங்க. ஒரு பயமும் இல்லே.''

அப்போதுதான் அங்கு ஒரு ஓரமாக நின்றிருந்த ஸிஸ்டர் ஜோஸபீனையும் ஸிஸ்டர் மேரியையும் கவனித்தாள். அவர்கள் முகத்தில் படர்ந்த பரிகாசச் சிரிப்பைக் கண்டு அவளுக்குத் தன்னை நினைத்து வெட்கமேற்பட்டது. கர்த்தர் மேல் தனக்கிருக்கும் நம்பிக்கையை எல்லாரும் சந்தேகிப்பதுதான் அந்தச் சிரிப்புக்குக் காரணம் என்று தோன்றிற்று.

''சரி, இன்னிக்கு வழக்கம்போல டிஸ்பென்ஸரிக்குப் போயிட்டு வாங்க. நானும் ஸிஸ்டரும் வெளியூர் போறதைப் பத்தி யார்கிட்டயும் சொல்லத் தேவையில்லே.''

''சரி ஃபாதர்''' என்றாள் அவள் மெல்லிய குரலில். நிமிர்ந்து மூலையில் நின்ற மற்றவர்களைப் பார்த்த போது போவோம் வா என்று சைகை காட்டினார்கள். அவள் தலையைக் குனிந்தபடி நகர்ந்து அவர்களுடன் அறையை விட்டு வெளியேறினாள்.

''ஃபாதர் சொன்ன பிறகு அதுக்கு மறுபேச்சு பேசக்கூடாது ஸிஸ்டர் ஆஞ்சலா'' என்றாள் ஸிஸ்டர் மேரி.

''நா எதுவுமே சொல்லல்லியே?'' என்றாள் அவள் வியப்புடன்.

''பிர்ச்னையிருக்குன்னு சொன்னீங்க இல்லே?''

''பிரச்னை இருக்கான்னு கேட்டாங்க. இருக்கிற விஷயத்தைச் சொல்லணுமில்லே.''

''நமக்கிருக்கிற சௌகரியம் கூட அவங்க இங்க வந்த போது இருக்கல்லே. நமக்கு அங்கே இங்கே போக ஜீப் இருக்கு. அவங்கள்ளாம் நடந்தே போவாங்க.''

இனம்புரியாத குற்ற உணர்வுடன் அவள் மௌனமானாள். நாமும் அவரும் ஒன்றா என்று கேட்கத் தோன்றிற்று. கர்த்தர் பெயர் சொன்னதாலே, இந்த உடுப்பு போட்டதாலே, அஞ்சலை ஆஞ்சலா ஆனதாலே பிறப்புறுப்பு மாறிடுச்சா என்று கேட்கத் தோன்றிற்று.

இவர்கள் பல சமயம் மாறிவிட்டவர்கள் போல நடந்து கொண்டார்கள். டிஸ்பென்ஸரிக்கு வரும் ஆண்களை எந்தவித சலனமுமில்லாமல், எல்லாருக்கும் சமமாக அருள்பாலிக்க வந்தவர்கள் போல நடத்தி னார்கள். கடும் ஜுரத்தில் விழுந்து பிழைத்த ஜுனேஜா, நன்றிப் பெருக்குடன் ஸிஸ்டர் மேரியின் கையை முத்தமிட்டபோது ஸிஸ்டர் மேரி கிட்டத்தட்ட அன்னை மேரியைப் போல புன்னகைத்தபடி நின்றது அவளுக்கு நினைவுக்கு வந்தது. ஆனால் அதற்குப் பிறகு ஜுனேஜா ஸிஸ்டரிடம் நடந்து கொள்ளும் விதமே வேறு மாதிரி இருந்தது. அதை ஸிஸ்டர் புரிந்து கொண்டாளா, புரிந்து கொண்டு அசட்டையாக இருந்தாளா என்று தெரியவில்லை. ஆனால் ஜுனேஜாவின் கவனிப்பு அவளுக்கு ஏதோ வகையில் திருப்தி அளித்ததாகத் தோன்றும்.

''ஸிஸ்டர் ஆஞ்சலா, டிஸ்பென்சரிக்குப் போகணும். நேரமாச்சு.''

''இதோ கிளம்பியாச்சு.''

புதர்களும் மரங்களும் நிரம்பிய அந்த கானகத்தின் வழியாகத் தோன்றியிருந்த அந்த முரட்டுப் பாதையில் ஜீப் செல்லும்போது அவளுக்கு ஊர் ஞாபகம் வந்தது. பொட்டல் வெளியும் சுரீர் வெயிலும் வைக்கோல்போரும் யார் செத்தாலும் கண்ணீர் விட்டு ஒப்பாரி பாடும் பெண்களும் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் குழந்தைகளும் நோஞ்சான் நாய்களும், எல்லார் சாவுக்கும் கண்ணீர் விடும் ஆத்தாதான் அவளைக் கண் சொடுக்காமல் மடத்துக்குத் தாரை வார்த்தாள். அதற்குப் பிறகு ஒப்பாரி பாடினாளோ என்னவோ. ''மஞ்சள் நீராட்டி மாப்பிள்ளை தேட வக்கில்லாம.... பெத்த மகளை தாரை வாத்தேன்....''

ஜீப் 'தம்''மென்று குலுக்கலுடன் நின்றது. டிஸ்பென்சரியின் முன்னால் இருந்த பெஞ்சுகளில் நோயாளிகள் கம்பிளியைப் போர்த்தியபடி நிரம்பி வழிந்தார்கள். வரும் வழியில் அவர்கள்

ஏற்றிக் கொண்டு வந்திருந்த டாக்டர் அபாங் ''நல்ல கூட்டம்'' என்று ஹிந்தியில் முணுமுணுத்தபடி இறங்கினார். ஜீப்பிலிருந்த மருந்து பெட்டிகளை எல்லாருமாக கிடு கிடுவென்று இறக்கி டிஸ்பென்சரிக் குள் எடுத்துச் செல்லும்போது கம்பளிப் போர்வைக்குள் பதுங்கி யிருந்த பல முகங்களில் லேசாகப் புன்னகை விரிந்தது. வலது கையால் நெற்றியைத் தொட்டு சிலர் ''குட்மார்னிங் ஸிஸ்டர்'' என்றார்கள். ஸிஸ்டர் மேரி பளிச்சென்று சிரித்தபடி ''குட்மார்னிங்'' என்றாள்.

''ஸிஸ்டர் ஆஞ்சலா!''

டாக்டரின் அழைப்புக்கு அவள் விரைந்தபோது பெஞ்சில் அமர்ந்திருந்த கம்பளி வரிசை, ''ஸிஸ்டர் ஆஞ்சலா, ஸிஸ்டர் ஆஞ்சலா!'' என்று ராகம் இழுத்தது. அவள் வியப்புடன் அவர்களைப் பார்த்தபோது ஏதோ ஹாஸ்யத்தைப் பகிர்ந்து கொண்டது போல சிரித்தது. அவளும் பதிலுக்கு சிரித்தபடி உள்ளே சென்றாள்.

உள்ளே நுழையும் நோயாளிக்கு டாக்டர் சொன்னபடி ஊசி போட்டு மாத்திரை கொடுத்து முடிப்பதற்குள் இடுப்பு விண்டு போனது. திடீரென்று வெளியில் பெரிய சத்தமாக ஆண் குரல் கேட்டது. கூடவே ஸிஸ்டர் மேரியின் கீச்சுக்குரல் அதட்டலாக வெளிப்பட்டது. ''நீ க்யூவிலேதான் வரணும். வேறே வழியில்லே. இவ்வளவு பேர் காத்திருங்காங்க இல்லே.''

வந்தவன் அடங்குவதாக இல்லை. டாக்டர் என்ன இரைச்சல் என்றபடி வெளியில் வந்த போது அவளும் எட்டிப் பார்த்தாள். ஒருவன் மகா கோபத்துடன் இரைந்து கொண்டிருந்தான். அவனு டைய பாஷை புரியாவிட்டாலும் ஏதோ ரவுடித் தனமாகப் பேசுவது புரிந்தது. அடிவயிற்றை சங்கடப்படுத்தியது. ஸிஸ்டர் மேரிக்கு இவர்கள் பாஷை தெரியும். மிகவும் கண்டிப்பாக தலையை அசைத்து ஏதோ பதில் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே பெஞ்சில் அமர்ந் திருந்தவர்கள் அவனுக்கு முன்னால் அமரும்படி இடம் நகர்த்திக் கொடுத்தார்கள். ஸிஸ்டர் மேரி அதைத் தடுக்கப் பார்த்தபோது டாக்டர்

அவள் தோளை மெல்லப் பற்றி, ''சற்று விட்டுப் பிடியுங்கள்'' என்றார் ஆங்கிலத்தில். ஸிஸ்டர் மேரியின் முகத்தில் ஏறிய சிவப்பைக் கண்டு அவளுக்கு பயமாக இருந்தது.

''உள்ளே வாங்க சிஸ்டர்'' என்றாள் அவள் மெல்ல.

''எதுக்காக விட்டுக் கொடுக்ணும். எல்லாரும் சொன்னபடி உக்காந்திருக்காங்க இல்லே?'' என்று கத்தியபடி ஸிஸ்டர் மேரி உள்ளே நுழைந்தாள்.

''மத்தவங்க மாதிரி இல்லே அவன்'' என்றார் டாக்டர் மெல்லிய குரலில். ''அவன் ரவுடி. உள்ளூர் எம்.எல்.ஏ.வுடைய ஆள். அவன் இன்னொரு ரவுடி.''

ஸிஸ்டர் மேரியின் கோபம் தணியவில்லை. ''எவன் நம்மளை என்ன செய்ய முடியும்? சேவை செய்யறோம், அவன் கொடுக்காத உதவி நாம பண்ணறோம்!'' என்றாள் தணிந்த குரலில்.

டாக்டர் அவளை சட்டை செய்யாமல், புதிதாக வந்தவனை உள்ளே அழைத்தார். ஸிஸ்டர் மேரி விருக்கென்று வெளியேறினாள்.

''வா, பீம்ஸா, என்ன கலாட்டா?'' என்றார் டாக்டர் சினேகிதமாக.

பீம்ஸா தோரணையுடன் நாற்காலியில் அமர்ந்தான். உரத்த குரலில் ஏதோ சொன்னான் வயிற்று வலி என்பது போல. அவளைச் சுட்டிக்காட்டி ஏதோ எகத்தாளமாகச் சொன்னான். வெளியில் இருந்த கம்பளிப் போர்வைகள் நகைத்தன. அவளுக்கு லேசாக நடுங்கிற்று. டாக்டர் எதுவும் சொல்லாமல் அவன் சுவாசத்தை சோதித்து வயிற்றை அமுக்கிப் பார்த்து ஊசி போடும்படி அவளுக்கு ஜாடை காட்டினார். அவள் அவனது தோள்பட்டையை சுத்தம் செய்து ஊசி ஏற்றும்போது அவன் அவளைத் தீவிரமாகப் பார்த்துச் சிரித்தான். அவள் கலவரத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஜீப்பில் மடத்துக்குத் திரும்பும் வழியில் டாக்டரும் ஸிஸ்டர் மேரியும் வாக்குவாதம் செய்தபடியே வந்தார்கள். டாக்டர் இறங்கிக் கொண்ட பிறகும் ஸிஸ்டரின் கோபம் தணியவில்லை. ''நன்றி கெட்ட ஜனங்க'' என்று திட்டினாள். ஊசிபோடும் போது அவன் சிரித்த சிரிப்பு ஞாபகம் வந்து மீண்டும் சங்கடப்படுத்திற்று. இரவு சாப்பாடு முடிந்து பிரார்த்தனை முடிந்து கதவெல்லாம் சரியாக சாத்தி யிருக்கிறதா என்று ஒருமுறைக்கிருமுறை பார்த்துப் படுத்தபோதும் சிரிப்பு தொடர்ந்தது. அதனால்தான் நடு இரவில் பீம்ஸாவும் அவனது ஆட்களும் கதவைத் திறக்கச் சொல்லி சத்தம் போட்டு கடைசியில் பலவீனமான அந்தக் கதவுகளை உடைத்து வேங்கை போல நுழைந்ததும் அது ஒரு தொடர் நிகழ்ச்சி போல அவளுக்குத் தோன்றிற்று.

ஜன்னலை மறைத்த திரையை விலக்கிப் பார்த்தபோது தீப்பந்தத்தைப் பிடித்துக் கொண்டு ராட்சஸர்கள் நிற்பது போல இருந்தது அவளுக்கு. ஊரில் மாரியம்மன் திருவிழாவில் புலி வேஷம் போட்டுக் கொண்டு ஆடுபவர்களைக் கண்டு பயந்து ஆத்தாவின் முந்தானைக்குள் ரவிக்கையில்லா மார்பகத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டதும் ''வெறும் வேஷம் புள்ளே அது'' என்ற ஆத்தாவின் வார்த்தைகளில் பயம் மறைந்ததும் நினைவுக்கு வந்தது. இது வெறும் வேஷமாகத் தோன்றவில்லை. அவர்களது கூச்சலுக்கு ஸிஸ்டர் மேரி சளைக்காமல் பலத்த குரலில் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ''ஜங்கிலி (காட்டுமிராண்டிகளா), போங்க'' என்று அவள் சத்தம் போட்ட போது தீப்பந்தத்துடன் அவர்கள் திமுதிமுவென்று கேட்டை தகர்த்துக் கொண்டு முன்னேறினார்கள். உள்ளே இரவு ஆடையில் இருந்தவர்கள் அவசரமாக உடைகளை அணிந்தார்கள். ஸிஸ்டர் மேரி ஜெபமாலை அணிந்து சிலுவையை பதற்றத்துடன் முத்தமிட்டபோது பீம்ஸாவும் அவனது ஆட்களும் உள்ளே நுழைந்து விட்டார்கள்.

* * * * *

கர்த்தரே! கர்த்தரே!

பிராத்தனை வராமல் நா புரண்டது.

எம்மை ரட்சித்தருளும்!
என்றென்றும் எங்கள் குடும்பத்
தைக் காத்தருளும்!
எங்கள் அயலாருக்கு எப்போ
தும் போல் இரங்கும்!
பர மண்டலங்களில் இருக்கிற
எங்கள் பிதாவே!

ஹெல்ப்! ஹெல்ப்! பச்சாவ்! பச்சாவ்!

பரமண்டலத்துப் பிதாவுக்குக் கேட்கவில்லை. புல் பூண்டு அசையவில்லை. உதவி பெற்றவர்கள் வாசல் திறக்கவில்லை. குரலுக்கு வளையம் போடப்பட்டது. வாயை இரும்புக் கை பொத்தியது.

அவளுக்கு ஆத்தாவின் நினைவு தான் வந்தது. அந்த முந்தானை போர்த்திய வெற்று மார்ப்புக்குள் முகத்தைக் கவிழ்க்கப் பதைத்தது.

* * * * *

ஸிஸ்டர் மேரியைப் பார்க்க சகிக்கவில்லை. பிழிய பிழிய அவள் அழுவதைப் பார்க்கும்போது நேற்று வீறாப்புப் பேசியவளா என்றிருந்தது. ''நடந்ததை யார்ட்டையும் சொல்ல வேணாம்'' என்றது அதிர்ச்சியைத் தந்தது. ''ஏன் ஸிஸ்டர். நடந்தது தப்புதானே? கொலைக் குத்தம் போல?''

''குத்தத்தை நம்ம பேரிலே திருப்புவாங்க. கர்த்தருக்கான இந்த உடம்பு புனிதம் கெட்டுப் போச்சுன்னு வீட்டுக்குப் போங்கன்னா, எங்க போவம்?''

அவள் கைகளைப் பற்றி ஸிஸ்டல் மேரி இரைஞ்சுவது கண்டு அவளுக்கும் பீதி ஏற்பட்டது. ஆனால் போலீஸ் வந்து தூண்டித் துருவிக் கேட்ட போது எதையும் அவளால் மறைக்க முடியவில்லை. ஃபாதர் ஜானும் ஸிஸ்டர் தெரஸாவும் அதிர்ச்சியா அல்லது சங்கடமா என்று புரியாத மௌனத்தில் இருந்தார்கள்.

''நீங்க எல்லாரும் வேற மடத்துக்குப் போறது நல்லது. இந்த சம்பவத்தை அப்பத்தான் உங்களால மறக்க முடியும்'' என்றார் ஃபாதர் இரண்டு நாள் கழித்து. ''தயாராயிருங்கள். நாளைக்குக் கிளம்பணும்.''

குளிக்கும் போது இரும்பு உடம்பு துவம்சம் செய்த இட மெல்லாம் பச்சைப் புண்ணாய் இன்னும் வலித்தது. ''தாவணி போட வக்கில்லாததாலே'' என்ற ஆத்தாவை நினைத்து கண்ணீர் வந்தது.

அவர்கள் கிளம்பும் போது ஃபாதர் சிலுவைக் குறியிட்டு ஆசீர்வதித்தார்.

''கர்த்தர் துணையிருப்பார்!''

அவள் சடக்கென்று சிஸ்டர் மேரியைப் பார்த்தாள். சிஸ்டர் மேரியின் முகத்தில் இப்போது சலனமேயில்லை. பழைய சுறுசுறுப்பு கூட திரும்பிவிட்டது போலிருந்தது.

செல்லும் பாதையில் பெரிய ஊர் வலம் ஒன்று வழி மறித்தது. அட்டகாசமான கோஷங்கள் கேட்டன. மொழி புரியாமல் அவள் பேசாமல் வேடிக்கை பார்த்தாள். ஸிஸ்டர் மேரிகாதைப் பொத்திக் கொண்டாள். வேகமாக எல்லாரையும் வண்டிக்குள் தலைகுனியச் சொன்னாள்.

''என்ன சொல்றாங்க ஸிஸ்டர்?''

''உனக்குத் தெரியாமே இருக்கிறது நல்லது அஞ்சலை.''

அவள் ஸிஸ்டர் மேரியை வியப்புடன் பார்த்தாள். உச்சரிக்கப் பட்ட அந்தப் பெயர் இந்தத் தருணத்தில் அந்நியமாக தொனிக்க வில்லை.

''சொல்லுங்களேன்.''

''வேற சாமியைக் கும்பிடறதினாலே நாம அன்னியர்களாம். நல்லா வேணுங்கறாங்க. பாவிங்க.''

அஞ்சலையின் முகத்தில் அதிர்வலைகள் விரிந்தன. ''நல்ல கூத்து'' என்று பித்துப்பிடித்தது போல வெகு நேரத்திற்கு சிரித்தாள். பிறகு ஸிஸ்டர் மேரி சற்றும் எதிர்பார்க்காமல் முரட்டு உடுப்பு மறைத்த அவளது மார்பகங்களில் முகத்தை அழுத்தி, ''வெறும் வேஷம் புள்ளே அதுன்னு சொல்லு ஆத்தா சொல்லு'' என்று அஞ்சலை அழ ஆரம்பித்தாள்.

இந்தியாடுடே 1998

✿